**புத்தள பிரதேச சபை**
**மொனறாகலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 27 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஜூன் 26 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர்த்து, புத்தள பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) மஹகொடயாய கொம்போஸ்ட் தொகுதிக்கு கொங்கிரீட் இடுவதற்கு மீளாய்வாண்டின் போது கிடைத்த ரூபா 812,105 தொகை மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வடக்கு, கிழக்கு உள்ளூராட்சி மன்ற சேவை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் புத்தள பொது நூலகத்திற்கு மீளாய்வாண்டின் போது கிடைத்த மொத்தம் ரூபா 4,160,975 தொகையான காணி மற்றும் அலுவலக உபகரணங்களில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) முன்னைய ஆண்டிற்குரிய மீளாய்வாண்டில் கிடைத்த ரூபா 720,000 ஆன தொடர்பாடல் கோபுர வருமானம் மீளாய்வாண்டின் வருமானமொன்றாக கணக்கீடு செய்யப்பட்டமையால் ஆண்டின் மிகை அப்பெறுமதியால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்காகவும் முன்னைய ஆண்டிற்காகவும் கிடைக்க வேண்டிய ரூபா 141,000 தொடர்பாடல் கோபுர வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய ரூபா 410,900 ஆன விளம்பர அறிவித்தல் கட்டணங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தப்பட்ட செலவினம் ரூபா 171,620 கணக்கீடு செய்யப்படாமையால் ஆண்டின் செலவினம் அப்பெறுமதியால் குறைத்தும் மிகை அப்பெறுமானத்தினால் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

**1.3.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

(i) 1988 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டு வரப்படும் 6 ஆதனங்களுக்குரிய ரூபா 1,235,279 ஆன நிலுவை குத்தகை வாடகை மீளாய்வாண்டிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) 2010 – 2016 காலப்பகுதியினுள் சபைக்குச் சொந்தமான இயந்திர உபகரணங்களை வாடகைக்கு வழங்கியமையால் அறவிடப்பட வேண்டிய ரூபா 2,770,542 தொகையை மீளாய்வாண்டிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2008 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் உடைத்து அகற்றப்பட்ட சபைக்குரிய கடைகளிலிருந்து ரூபா 196,054 ஆன நிலுவை கடை வாடகையை மீளாய்வாண்டின் போதும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

சபையினால் உள்நாட்டுக் கடன் நிதியத்திலிருந்து 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 25,563,562 ஆன கடன்தொகைக்குரிய செலுத்த வேண்டிய மொத்த தவணை மற்றும் வட்டி ரூபா 3,205,224 தொகையை மீளாய்வாண்டின் போதும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாத காரணத்தால் ரூபா 438,989,914 ஆன 03 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

**1.3.5 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 152 ஆம் பிரிவு | 141,000 | சபை அதிகாரப் பிரதேசத்தில் பல்வேறு கம்பனிகளால் நிர்மாணிக்கப்பட்டிருந்த 03 தொடர்பாடல் கோபுரங்களிலிருந்து கிடைக்க வேண்டிய வருடாந்த குத்தகையொன்று மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிகள் | | |
| | (i) 67 ஆவது விதி | | சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள வர்த்தக வியாபாரங்கள் தொடர்பில் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| | 193 ஆவது விதி | - | ஒவ்வொரு வருமானம் மற்றும் செலவின விடயங்களின் கீழ் வரும் மிகைகள் / பற்றாக்குறைகள் மற்றும் அது தொடர்பான விடயங்களை தெரிவுபடுத்தும் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | 248,353 | 2010 – 2015 காலப்பகுதியில் நிறைவேற்றப்பட்ட 06 நிர்மாணங் களுக்குரிய விடுவிக்கப்படாத நிறுத்தி வைத்தல் பணத்தை அரசின் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | | சபைக்குச் சொந்தமான 21 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் எரிவு தொடர்பான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானியின் V ஆம் அட்டவணை | | முன் செய்முறைக் கட்டணம், சேவைகள், கட்டணங்கள் மற்றும் மேவுகை அங்கீகாரம் வழங்குவது தொடர்பான கட்டணங்களை அறவிடுவதற்காக பிரசித்தப்பட்டிருக்க வில்லை. |
| (ஊ) | ஊவா மாகாணத்தின் பிரதம அமைச்சர் மற்றும் உள்ளூராட்சி மன்ற விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் 2013 யூன் 28 ஆந் திகதிய 1816/43 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி | | சபையினால் அனுமதியற்ற வியாபாரங்கள் மற்றும் நடமாடும் வியாபாரங்களை கண்காணித்தல் கட்டுப்படுத்துதல் மற்றும் அச் செயற்திட்டத்திற்காக அனுமதிப்பத்திர மொன்று வழங்குதல், முறைப்படுத்துதல் மற்றும் தடை செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | ஊவா மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் 1980 திசெம்பர் 31 ஆந் திகதிய 1980/46 ஆம் இலக்க சுற்றறிக்கை | | 2016 ஆம் ஆண்டின் பின்னர் சபைக்குச் சொந்தமான கடைகளுக்கு வாடகையை மதிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 02 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந் ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,022,021 ஆக இருந்துடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 10,466,116 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| வீதவரி மற்றும் வரி | 2,283,220 | 2,187,505 | 1,476,668 | 2,601,219 | 2,257,070 | 2,262,302 | 1,382,368 | 2,944,404 |
| வாடகை | 5,860,800 | 5,709,700 | 4,660,975 | 2,291,490 | 5,394,100 | 5,611,376 | 5,475,793 | 1,994,573 |
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 1,174,000 | 1,174,559 | 1,174,459 | - | 1,246,500 | 1,086,839 | 1,086,839 | - |
| ஏனைய வருமானம் | 18,840,640 | 22,584,463 | 23,272,464 | 9,553,476 | 57,888,760 | 27,799,668 | 18,470,084 | 10,585,983 |
| மொத்தம் | 28,158,660 | 31,656,227 | 30,584,566 | 14,446,185 | 66,786,430 | 36,760,185 | 26,415,084 | 15,524,960 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்தமாக பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 31.7 மில்லியனாக இருந்ததுடன், ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் 30.5 மில்லியனாக இருந்தது. எவ்வாறாயினும் ஆண்டின் இறுதி அளவில் ரூபா 14.4 மில்லியனான வருமானமொன்று சேகரிக்கப்பட்டதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிலுவை வருமானம் 7 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

### 2.2.3 வீதவரி மற்றும் வரி

(அ) வீதவரி அறவிடுவதற்குரிய ஆதனங்கள் 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் சபையினால் 2006 ஆம் ஆண்டின் பின்னர் வீதவரிக்காக ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிலுவை வீதவரி வருமானம் ரூபா 2,944,405 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் அந்நிலுவை வீதவரிகளிலிருந்து ரூபா 1,014,881 தொகை சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிலுவை அறவீடு 34 சதவீதமான குறைந்த சதவீதமாக இருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்குரிய நீர்க்கட்டணங்கள் ரூபா 561,663 தொகை ஆண்டின் இறுதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 வாடகை

(அ) சபைக்குச் சொந்தமான 04 ஆதனங்களை குத்தகைக்கு வழங்குவதற்காக கூறுவிலை கோரப்பட்டிருந்த போதிலும், குத்தகையாளர் முன்வராமையால் 2013 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் வரை குத்தகைக்கு வழங்க முடியாதிருந்தது.

(ஆ) சபைக்குச் சொந்தமான கடைகளை குத்தகைக்கு வழங்கியதால் மீளாய்வாண்டிற்குரிய ரூபா 173,060 அறவிடப்பட வேண்டியிருந்தது.

**2.2.5 ஏனைய வருமானம்**

(அ) 2016 நவம்பர் 25 ஆந் திகதிய 1995 ஆம் இலக்க வர்த்தமானிப் பத்திரத்தின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தில் ஸ்தாபிக்கப்பட்ட இடங்களில் வாகனங்கள் நிறுத்துதல் மற்றும் நிறுத்தி வைத்தலுக்கான கட்டணங்களை அறவிடுவதற்கு பிரசித்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அக்கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான இயந்திர உபகரணங்களை வாடகைக்கு வழங்கியதால் மீளாய்வாண்டிற்குரிய அறவிடப்பட வேண்டிய ரூபா 2,733,514 ஐ ஆண்டில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 2,869,713 மற்றும் முத்திரை கட்டணம் ரூபா 1,168,598 ஆக இருந்தது.

**2.3 மிகை அறவீடு**

பிரதேச சபை சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த நபர்களுக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டுகளில் விதிக்கப்பட்ட மிகை அறவீட்டிற்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 733,241 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், மக்கள் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பான வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) உப விதிகள்**

பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 11 விடயங்களுக்கு மாத்திரம் உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன.

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

பிறப்பிக்கப்பட உப விதிகளின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகள் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1816/43 ஆம் இலக்க 2013 யூன் 28 ஆந் திகதிய வர்த்தமானி பத்திரத்தின் மூலம் வெளியிடப்பட்ட ஊவா மாகாண உப விதிகளை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் அதன் 13 ஆவது பகுதியின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் கழிவுப்பொருள் வரி விதிக்கப்பட்டு கழிவுப் பொருள் முகாமைத்துவ செலவினம் மீள் நிரப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) சுற்றாடல் சிக்கல்**

(i) இலங்கை சனநாயக 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் 64(1) கட்டளையின் பிரகாரம் சபையினால் அங்கீகரித்துக் கொள்ளப்பட்டிருந்த 2001 யூன் 10 ஆந் திகதிய 2816 ஆம் இலக்க திட்ட வரைபடத்தின் பிரகாரம் இருக்க வேண்டிய காணியின் வாய்க்கால் வீதியை காட்டும் பகுதிக்காக வனாந்திரத்தில் உப பிரிப்பு இடம்பெற்றிருக்கவில்லை. மேலும், திட்ட வரைபடத்தின் பிரகாரம் வனாந்திரத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த 5 மீற்றர் அளவு வனாந்தர பிரதேசத்தின் வாய்க்கால் வழியே கட்டிடமொன்று நிர்மானிக்கப்பட்டிருந்தது.

(ii) சபையினால் 2016 ஆம் ஆண்டின் போது கட்டிடத் திட்டம் அங்கீகரிக்கப்பட்ட காணியொன்றின் திட்டத்தில் காணப்படும் வாய்க்கால் 252 சதுர அடி நிறைக்கப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் 28 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) சபையினால் 2015 ஆம் ஆண்டின் போது அங்கீகரிக்கப்பட்டிருந்த வர்த்தக செயற்பாடுகளுக்கான கட்டிடத் திட்டமொன்றில் வீதி ஒதுக்கீடாக பிரதான வீதியிலிருந்து 50 அடி தூரம் ஒதுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் வீதி ஒதுக்கீட்டிற்காக 39 அடிகள் மாத்திரம் ஒதுக்கப்பட்டிருந்தது.

**(உ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்**

நிலைபேரான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் பிரகாரம் சபை அறிந்துகொள்ளாததன் காரணமாக அந் நோக்கங்களுக்கான உலகலாவிய குறிகாட்டிகள் மூலம் சபை அதிகாரப் பிரதேசத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலைமை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்டகாலத் திட்டம் 2018 மே 25 ஆந் திகதி அளவிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

(அ) சபையினால் 2014–2017 காலப்பகுதியில் அங்கீகரிக்கப்பட்டிருந்த கட்டிட திட்டம் மற்றும் 59 பிரித்தெடுப்பு விண்ணப்பங்களுக்காக 1982 இன் 4 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் 8(ஓ)(1) பிரிவின் பிரகாரம் அனுமதிப்பத்திரமொன்று வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையினால் 2014–2016 காலப்பகுதியில் அங்கீகரிக்கப்பட்டிருந்த 26 கட்டிட திட்டங்களுக்காக நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தின் 08/01/38 மற்றும் 1985 மார்ச் 20 ஆந் திகதி சுற்றறிக்கையின் பிரகாரம் இணக்கச் சான்றிதழ்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி பத்திரத்தின் பிரகாரம் இணக்கச் சான்றிதழ்

பெற்றுக்கொள்ளாத நிர்மாணங்களிலிருந்து தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) பிரதேசசபை அதிகாரப் பிரதேசத்தில் அனுமதியற்ற நிர்மாணம் தொடர்பான கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 1986 மார்ச் 10 ஆந் திகதிய 392/9 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 1985 இன் மார்ச் 20 ஆந் திகதிய 08/1/38 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த 14 அனுமதியற்ற நிர்மாணங்களுக்காக மேவுகை அங்கீகாரம் வழங்குவதற்கோ அல்லது நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் 28 ஆம் பிரிவின் பிரகரம் சட்டரீதியான நடவடிக்கைகளோ எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 மனித வள முகாமைத்துவம்

வருடக் கணக்காக முன்கொண்டு வரப்பட்டு வரும் ரூபா 249,876 ஆன ஊழியர் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 செயற்பாட்டு வினைத்திறனின்மை

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 140 மற்றும் 143(i) ஆம் பிரிவுகளின் பிரகாரம் வருடாந்தப் பெறுமதி தொடர்பில் தாக்கமளிக்கும் வகையில் ஆதனங்களுககு மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களின் பேரில் புதிய வீதவரி மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டு வீதவரி அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 3.5 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த புத்தள வாரச் சந்தைக்குரிய ரூபா 140,362 ஆன நீர்க்கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.6.1 கையேற்கப்படாத சொத்துக்கள்

அரச நிறுவனங்களிலிருந்து பிரதேச சபைக்கு கிடைத்த 03 வாகனங்கள் மற்றும் மோட்டர் கிரேடர் இயந்திரமொன்றின் உரித்தினை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.6.2 பயன்படுத்தப்படாத / குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

2003 ஆம் ஆண்டின் போதும் 2012 ஆம் ஆண்டின் போதும் 02 அரச நிறுவனங்களிலிருந்து பிரதேச சபைக்கு கிடைத்த மற்றும் சபைக்குச் சொந்தமான சிறிய உழவு இயந்திரமொன்றும் கொங்கிரீட் கலவை இயந்திரமொன்றும் வருடக் கணக்காக எவ்வித செயற்பாடுகளுக்கும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2017 யூலை மாதம் முதல் செயற்படாதிருந்த சபைக்குச் சொந்தமான பெக்கோ லோடர் இயந்திரம் திருத்தம் செய்யப்படாமல், சபையினால் செயற்படுத்தப்பட்ட நிர்மாண வேலைக்குரிய தனியார் நிறுவனமொன்றின் பெக்கோ லோடர் இயந்திம் பயன்படுத்தப்பட்டு அதற்காக ரூபா 192,500 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### 3.8 இனங்காணப்பட்ட நட்டங்கள்

(அ) சபையில் சேவை புரிந்த அமைய ஊழியர்களின் 2012 ஒக்தோபர் மாதம் முதல் 2015 ஒக்தோபர் வரையான காலப்பகுதிக்குரிய ஊழியர் சேமலாப நிதியினை நிர்ணயிக்கப்பட்ட திகதியில் அனுப்பி வைக்கப்படாமையால் ரூபா 57,814 ஆன மிகை கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) சபைக்குச் சொந்தமான 10 வாகனங்களுக்காக நிர்ணயிக்கப்பட்ட திகதியில் வருமான அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளாமையால் 2015-2018 வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 20,335 ஆன தண்டப்பணம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### 3.9 பெறுகைகள்

#### 3.9.1 பெறுகை திட்டம்

மீளாய்வாண்டிற்காக பிரதேச சபையினால் வருடாந்த பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 04. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக பிரதேச சபையின் பாதிடப்பட்ட வருமானம், செலவினம் மற்றும் உள்ளபடியான வருமானம், செலவினங்களுக்கிடையே கருத்திற் கொள்ளக்கூடிய விலகல்கள் அவதானிக்கப்பட்டதால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

மீளாய்வாண்டிற்காக சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினை போதியளவில் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 05 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட குறைபாடுகள் சபையின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதுடன். பின்வரும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) கணக்கீடு செய்யப்பட்ட காணி முறையாக மதிப்பீடு செய்யப்படாமை |
| | (ii) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்கள் கணக்கீடு செய்யப்படாமை |
| | (iii) அட்டுறு செலவினம் கணக்கீடு செய்யப்படாமை |
| | (iv) பெறவேண்டிய வருமானம் கணக்கீடு செய்யப்படாமை. |
| (ஆ) சொத்துக்கள் | (i) பதிவேடுகளுக்கு உட்படுத்தாமை |
| | (ii) காணியை கையேற்க நடவடிக்கை எடுக்கப்படாமை |